www.freetnbooks.com

விருதுநகா் மாவட்டம்

காலாண்டு பொதுத் தேர்வு - 2025

வகுப்பு 8

தமிழ்

கால அளவு: 2.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 100

பகுதி - I

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 10×1=10**

1) கழுத்தில் சூடுவது ........
அ) தார் ஆ) கணையாழி இ) தண்டை ஈ) மேகலை

2) பெரிய கப்பல்கள் .......... மீது செல்லும்
அ) ஊழி ஆ) ஆழி இ) நாழி ஈ) தாழி

3) தமிழ் எழுத்துச் சீா்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ...........
அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

4) கிழிந்து + எழில் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் :..........
அ) கிழிந்துஎழில் ஆ) கிழிந்தெழில் இ) கிழிந்தொழில் ஈ) கிழிந்தழில்

5) கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ..........
அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை

6) நோய்கள் பெருக மனிதன் ........... விட்டு விலகியது தான் முதன்மைக் காரணமாகும்.
அ) வீட்டை ஆ) உணவை இ) நாட்டை ஈ) இயற்கையை

7) பின்வருவனவற்றுள் இறந்த கால வினைமுற்று ................
அ) படித்தான் ஆ) நடக்கிறான் இ) உண்பான் ஈ) ஓடாது

8) கோயிலப்பா என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..........
அ) கோ+அப்பா ஆ) கோயில்+லப்பா இ) கோயில்+அப்பா ஈ) கோ+இல்லப்பா

9) தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ............
அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

10) 'கடல் ஓடா' - எனத் தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி ............
அ) எடுத்துக்காட்டு உவமை அணி ஆ) தற்குறிப்பேற்ற அணி
இ) உவமை அணி ஈ) பிறிது மொழிதல் அணி

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக. 5×1=5**

11) எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் :............
12) மரத்தின் உடையாகக் குறிப்பிடப்படுவது .............. ஆகும்
13) ஆயுத எழுத்து பிறக்கும் இடம் ...........
14) வாழ்விற்குரிய இன்பத்துறைகளில் தலையாயது ............. இன்பம் ஆகும்.
15) மறை பொருளைக் காத்தல் ............. எனப்படும்

**இ) பொருத்துக. 5×1=5**

16) இயற்கை ஓவியம் - திருக்குறள்
17) இயற்கைத் தவம் - பெரியபுராணம்
18) இயற்கைப் பரிணாமம் - சிந்தாமணி
19) இயற்கை அன்பு - கம்பராமாயணம்
20) இயற்கை வாழ்வில்லம் - பத்துப்பாட்டு

பகுதி - II

**அ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் குறுகிய விடையளி 4×2=8**

21) தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?
22) இயற்கை போற்றத்தக்கது ஏன்?
23) பட்ட மரம் எதனை நினைத்துக் கவலை அடைந்தது?
24) பிறிது மொழில் அணி என்பது யாது?
25) யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?

**ஆ) எவையேனும் நான்கனுக்கு மட்டும் குறுகிய விடையளி 4×2=8**

26) திரு.வி.க சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக
27) தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?
28) வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக
29) இன்றைய கல்வியின் நிலை பற்றி திரு.வி.க கூறுவன யாவை?
30) ஓவிய எழுத்து என்றால் என்ன?

**இ) எவையேனும் இரண்டனுக்கு மட்டும் குறுகிய விடையளி 2×2=4**

31) மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?
32) மயங்கொலி எழுத்துகள் யாவை?
33) வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner

www.freetnbooks.com



## பகுதி - III

அ) சிறுவினா 3×4=12

34) அ) தமிழையும் கடலையும் ஒப்பிட்டுத் தமிழழகனார் கூறுவன யாவை?

(அல்லது)

ஆ) நமக்கு இருக்க வேண்டிய பண்பு நலன்களாக நல்லந்துவனார் கூறும் விளக்கங்களைத் தொகுத்து எழுதுக

35) அ) பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?

(அல்லது)

ஆ) எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக

36) அ) 'வருமுன்னர்க் காவாதான்........' எனத் தொடங்கும் குறளில் உள்ள உவமை அணியை எழுதுக

(அல்லது)

ஆ) ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?

ஆ) சிந்தனை வினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும்) 2×5=10

37) இயற்கையைப் போற்றும் வழக்கம் ஏற்படக் காரணமாக எவற்றைக் கருதுகிறீர்கள்?

38) உங்கள் மீது பிறர் வெறுப்புக் காட்டினால் அவர்களை எவ்வாறு எதிர்கொள்வீர்கள்?

39) பாரதியார் தமிழை வண்மொழி என்று அழைக்கக் காரணம் என்ன?

## பகுதி - IV

அடிபிறழாமல் எழுது 4+2=6

40) அ) வாழ்க நிரந்தரம் ........ எனத் தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்து மனப்பாடப் பாடலை எழுதுக

(அல்லது)

ஆ) ஆற்றுதல் ......... எனத் தொடங்கி சொறாஅமை வரை முடியும் பாடறிந்து ஒழுகுதல் மனப்பாடப் பாடலை எழுதுக

41) 'இறைக்கு' - என முடியும் திருக்குறளை எழுதுக

## பகுதி - V

மொழிப்பயிற்சி (எவையேனும் நான்கு மட்டும்) 4×2=8

42) **கலைச்சொல் தருக**

அ) TALENT

ஆ) MEDICAL PLANT

43) **கோடிட்ட இடத்தை நிரப்புக**

விலங்கொடு ............ அனையர் .............

கற்றாரோடு ஏனை யவர்

44) **வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக**

அ) தருகின்றனர்

ஆ) சென்றனர்

45) **பின்வரும் தொடர்களில் உள்ள மயங்கொலிப் பிழைகளைத் திருத்தி எழுதுக**

அ) தேர்த் திருவிலாவிற்குச் செண்றனர்

ஆ) வாழைப்பலம் உடலுக்கு மிகவும் நல்லது.

46) **பின்வரும் தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.**

அ) திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுத்துக் கொண்டது

ஆ) தமிழ் மொழி செம்மையானது வலிமையானது இளமையானது.

47) **ஒரு சொல் ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக**

அ) திங்கள் .........................................

ஆ) ஆறு .........................................

## பகுதி - VI

விரிவான விடையளி. 3×8=24

48) அ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக

(அல்லது)

ஆ) திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடத்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக

49) அ) காப்பியக் கல்வி குறித்துத் திரு.வி.க கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக

(அல்லது)

ஆ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக

50) அ) **கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக**

முன்னுரை - நூலகத்தின் தேவை - வகைகள் - நூலகத்தில் உள்ளவை - படிக்கும் முறை - முடிவுரை

(அல்லது)

ஆ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

\- - - - - -

www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with OKEN Scanner